**சுருக்கம்**

நாமக்கல் மாவட்டம் – கபிலர்மலை ஒன்றியத்தைச் சார்ந்த 35 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் – நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (கு.வ.1) துறை**

**அரசாணை (நிலை) எண். 96** **நாள்: 15. 6 .09**

**படிக்கப்பட்டது:**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் கடிதம் கோகபிலர்மலை/உ.பொ.8/திமேபி/2008, நாள் 20/01/09

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை ஒன்றியத்தைச் சார்ந்த சோழசிராமணி, சுள்ளிபாளையம், குப்பிரிக்கா பாளையம் மற்றும் பெருங்குறிச்சி ஊராட்சிகளிலுள்ள 35 குடியிருப்புகளில் உள்ளூர் நீர் ஆதாரங்களில் நிலத்தடி நீர் மட்டம் மிகவும் குறைந்து வருவதாலும், கடினபாறைகள் காரணமாக உள்ளூர் நீர் ஆதாரங்களில் நீர் மட்டம் உயரும் வாய்ப்புகள் குறைவு என்பதால் மேற்படி 35 குடியிருப்புகளில் 2040 ஆம் ஆண்டு உச்சகட்ட காலத்தில் மக்கட்தொகை 10829 என கணக்கிடப்பட்டு, நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் மற்றும் 10 சதவீத குழாய் வழி நீர் இழப்பினையும் சேர்த்து உச்ச கட்டகாலத்தில் (2040) 0.48 மில்லியன் லிட்டர் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் காவேரி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்க திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

2) இக்கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தினை, ரூ.236.00 இலட்சம் (ரூபாய் இருநூற்று முப்பத்தாறு இலட்சங்கள் ) அமைப்புச் செலவிலும், ரூ.11.00 (ரூபாய் பதினோரு லட்சங்கள் ) ஆண்டு பராமரிப்புச் செலவிலும், ரூ.2,615/– தனி நபர் திட்ட செலவிலும், ஆயிரம் லிட்டர் குடிநீர் உற்பத்தி செலவு ரூ.21.97 என்ற மதிப்பீட்டில், குறைந்த பட்ச தேவை திட்டத்தின் கீழ் 100 விழுக்காடு அரசு மான்யத்துடன் செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அரசின் நிர்வாக ஒப்புதல் கோரியுள்ளார். மேலும், 12.1.2009 நாளிட்ட வாரியத் தீர்மான எண்2.1–ல் , இக்கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் பெற பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

3) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை ஒன்றியத்தைச் சார்ந்த சோழசிராமணி, கள்ளிபாளையம், குப்பிரிக்காபாளையம் மற்றும் பெருங்குறிச்சி ஊராட்சிகளிலுள்ள 35 குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் மேம்பாட்டு திட்டத்தினை, **அமைப்புச் செலவு ரூ. 236.00 இலட்சம்,** (ரூபாய் இருநூற்று முப்பத்தாறு இலட்சங்கள் ) **ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.11.00 இலட்சம்** (ரூபாய் பதினோரு லட்சங்கள் ) **தனி நபர் திட்டச் செலவு ரூ.2615/– மற்றும் 1000 லிட்டர் குடிநீர் உற்பத்திச் செலவு ரூ. 21.97** என்ற மதிப்பீட்டில், குறைந்த பட்ச தேவை திட்டத்தின் கீழ், 100 விழுக்காடு அரசு மான்யத்துடன் செயல்படுத்த, நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4) இவ்வாணை 9/3/09 நாளிட்ட நிதித்துறையின் அ.சா..எண்.12634 A/ந.நி.ம.கு.வ /09 –ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை –5
ஊரகவளர்ச்சி ஆணையர், பனகல் கட்டிடம், சென்னை –15
மாநில கணக்காயர், சென்னை–18
மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல் மாவட்டம்.
சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள், (ஊரக வளர்ச்சி ஆணையர் மூலமாக)
நிதி (ந.நி.ம.கு.வ) துறை
நகல்:மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை –9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.2) துறை, சென்னை–9

**(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)**

**பிரிவு அலுவலர்.**